1973 நவம்பர் 23]

திருப்பூர் அருகே உள்ள ஜம்மனை பாலம்.

* 338 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-சோமனூர் பாதையில் நகராட்சி மன்றத்திற்கு அருகில் உள்ள ஜம்மனை பாலம் கட்டும் வேலை எப்போது முடிவு பெறும்?

(இ) பால வேலை முடிவு பெறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ்வேலை முடிவடைந்து 17—11—1973-ம் நாளன்று போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது. உறுப்பினர் தலைமை வகித்தது ஞாபகம் இருக்குமென்று கருதுகிறேன்.

வாணியம்பாடியருகே பாலாற்றின் குறுக்கே பாலம்

* 339 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி நகரத்திற்கும், ஜாப்ராபாத் பஞ்சாயத்திற்குமிடையே பாலாற்றின் மீது பாலம் ஒன்று கட்டுவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான தொடக்க வேலைகள் எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இவ் வேலையை மத்திய சாலை நிதித்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவ் வேலையை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: பூர்வாங்க வேலைகளைத் தொடங்குவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: மத்திய அரசு ஒப்புதல் கிடைத்தவுடன் வேலையைத் தொடங்கிவிடலாம். பூர்வாங்க வேலை என்று மட்டுமல்ல, அவர்கள் ஒப்புதல் கிடைத்தவுடன் வேலையைத் தொடங்கிவிடலாம். ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறோம்.